தமிழ்நாடு மாநில தலைமை மீன்வளக் கூட்டுறவு இணையம் (டாப்கோபெட்) தூத்துக்குடி
(திட்ட அலுவலர், டாப்கோபெட், மீன்வளத்துறை வளாகம், 166-வடக்கு கடற்கரைச் சாலை, தூத்துக்குடி

***********************************************************

**ந.க.எண்.50/2019** **நாள்:13.05.2022**

**ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள்**

தமிழ்நாடு மாநில தலைமை மீன்வளக் கூட்டுறவு இணையத்திற்கு சொந்தமான வாகனத்தினை கழித்தொதுத்குதல் - மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளி முறையில் ஏலம் விடுதல் தொடர்பான ஒப்பந்த நிபந்தனைகள்:

**வாகனங்களின் பதிவு எண்கள்:**

1. TN 09 Q 4428 - (குறைந்த பட்ச நிர்ணயத்தொகை ரூ.22,000/-)
2. TN 09 Q 4424 - (குறைந்த பட்ச நிர்ணயத்தொகை ரூ.24,000/-)

தமிழ்நாடு மாநில தலைமை மீன்வளக் கூட்டுறவு இணையத்திற்கு சொந்தமான மேற்கண்ட வாகனங்களை ஒப்பந்தப்புள்ளி மூலம் விற்பனை செய்யப்பட உள்ளது.

1. ஒவ்வொரு வாகனத்திற்கும் தனித்தனியாக ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்திட வேண்டும்.
2. ஒப்பந்தப்புள்ளி எது அதிக பட்சத்தொகையோ அத்தொகைக்கு ஏலம் முடிவு செய்யப்படும்.
3. கழித்து ஒதுக்கப்பட்ட வாகனத்திற்கான பதிவுச்சான்றிதழ் (RC Book) வழங்கப்பட மாட்டாது
4. ஒப்பந்தப்புள்ளி தொடர்பாக நிர்ணயிக்கப்பட்ட படிவத்தில் அனைத்து விபரங்களையும் முறையாக நிரப்பி ஒப்பந்தப்புள்ளிகளுடன் இணைத்து மூடி முத்திரையிடப்பட்ட உறையில் வைத்து 30.05.2022 அன்று மாலை 3.00க்குள் நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ திட்ட அலுவலர், டாப்கோபெட், மீன்வளத்துறை வளாகம், 166-வடக்கு கடற்கரைச் சாலை, தூத்துக்குடி என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும்.
5. குறிப்பிட்ட தேதிக்கு பின் பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக் கொள்ள பட மாட்டாது.
6. ஒப்பந்தப்புள்ளி அளிக்கப்படும் மூடி முத்திரையிடப்பட்ட உறையின் மீது ஊர்தியின் பதிவு வெண். மற்றும் தனிநபரின் தொலைபேசி எண் குறிப்பிடப்பட வேண்டும்.
7. உறையின் மேல் வாகன விற்பனை ஒப்பந்தப்புள்ளி எழுது அனுப்பிட வேண்டும்.
8. ஒப்பந்தப்புள்ளி வாகனங்களை திட்ட அலுவலர், டாப்கோபெட், மீன்வளத்துறை வளாகம், 166-வடக்கு கடற்கரைச் சாலை, தூத்துக்குடி என்ற விலாசத்திற்கு ஒப்பந்தப்புள்ளிதாரர்கள் அலுவலர்கள் அனைத்து வேலை நாட்களிலும் முற்பகல் 10.30 மணி முதல் பிற்பகல் 05.00 வரை உரிய அனுமதி பெற்று வாகனங்களை நேரில் பார்வையிடலாம்.

Scanned with CamScanner

9. ஏலதாரர்கள் வாகனத்திற்கு ஒப்பந்தப்புள்ளி கொடுப்பதற்கு முன் வாகனத்தை நேரில் பார்வையிட்டு மதிப்பீடு செய்து ஒப்பந்தப்புள்ளி கொடுக்குமாறு தெரிவிக்கப்படுகிறது.

10. விலைப்புள்ளி அளிப்பவர் வாகனத்திற்கான அதிகபட்ச கேட்புத் தொகையினை தெளிவாக எண்ணாலும் எழுத்தாலும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி படிவத்தில் குறிப்பிட்டு கையொப்பம் இட வேண்டும்.

11. படிவத்தில் திருத்தங்கள் இருத்தல் கூடாது.

12. பெறப்படும் மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளி கொண்ட உறைகள் திட்ட அலுவலர் மற்றும் ஏலதாரர்கள் அல்லது அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட நபர்கள் முன்னிலையில் 06.06.2022 அன்று பிற்பகல் 03.00 மணிக்கு திறக்கப்படும். அதிகபட்ச குத்தகைத் தொகை கேட்பு செய்த குத்தகைதாரருக்கு ஒப்பந்த உரிமம் வழங்கப்படும்.

13. அதிக தொகைக்கு கேட்பு செய்த ஒப்பந்ததாரர் முழு தொகையையும் அன்றே செலுத்தும் பட்சத்தில் அவர்களுக்கு வாகனத்திற்கான ஒப்பந்த உரிமம் வழங்கப்படும்.

14. மூடிமுத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளி விண்ணப்பத்துடன் கேட்புத் தொகையில் 50% தொகையினை வரைவோலையாக (The Managing Director, TAFCOFED, Chennai) இணைத்து சமர்ப்பிக்கப்பட வேண்டும். வரைவோலைத்தொகை 50% தொகைக்கு குறைவாக இருப்பின் ஒப்பந்தப்புள்ளி நிராகரிக்கப்படும்.

15. வெற்றி பெற்ற ஏலத்தாரர்கள் 07.06.2022 அன்றுக்குள் மீதி ஏலத்தொகையை செலுத்த தவறும் பட்சத்தில் ஏற்கனவே செலுத்திய 50% தொகையினில் 25% தொகை மற்றும் பினைமுறித் தொகையினை அபராத தொகையாக கருதி அதனை இணையத்தின் வங்கிக் கணக்கில் சேர்க்கப்படும் என்பதுடன் வெற்றி பெற்ற ஏல தாரரின் ஏலம் ரத்து செய்யப்பட்டு இரண்டாவது அதிக தொகைக்கு ஏலம் கூறிய நபருக்கு இறுதி செய்யப்படும்.

Scanned with CamScanner

## தமிழ்நாடு மாநில தலைமை மீன்வளக் கூட்டுறவு இணையம் (டாப்கோபெட்) தூத்துக்குடி

(திட்ட அலுவலர், டாப்கோபெட், மீன்வளத்துறை வளாகம், 166-வடக்கு கடற்கரைச் சாலை, தூத்துக்குடி

| | | |
|---|---|---|
| 1. | விண்ணப்பதாரரின் பெயர் | : |
| 2. | கணவர் / தகப்பனார் பெயர் | : |
| 3. | வயது | : |
| 4. | முகவரி | : |
| 5. | கைபேசி எண் | : |
| 6. | ஆதார் அட்டை எண் | : |
| 7. | குடும்ப அட்டை எண் | : |
| 8. | வாகனத்தின் பதிவு எண் | : |
| 9. | ஒப்பந்த கேட்புத்தொகை | : |
| 10. | 50% வரைவோலை விபரம் | : |

### உறுதி மொழி

விண்ணப்பத்தில் என்னால் அளிக்கப்பட்டுள்ள அனைத்து விபரங்களும் உண்மை என சான்றளிக்கிறேன்.

விண்ணப்பதாரரின் கையொப்பம்

Scanned with CamScanner